1975 மாா்ச் 15]

Primary Schools.

*328. Q.—THIRU N. K. PALANISAMY and THIRU ALADI ARUNA : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to regulate the functionin of the English medium primary and nursery schools in the State ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Siddha Dispensary in Secretariat.

*329 Q.—THIRU KOVAI CHEZHIYAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the non-availability of essential Siddha medicines in the Siddha Dispensary at Fort St. George. Madras ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சித்த மருத்துவ மருந்தகத்தில் நான்கு மருந்துகள் மட்டுமே சில குறிப்பிட்ட காலங்களில் கிடைக்காமல் இருந்தன. ஒரு மருந்து இந்த நாள் வரையிலும் கூட கிடைக்கவில்லை. அதன் பெயர் "சண்டமாருதம்". அயக்காந்தம், அயவீரம், அயச்செந்தூரம் ஆகிய மருந்துகள் இடைக்காலத்தில் கிடைக்காமல் இருந்தன.

(இ) அவற்றைத் தொடர்ந்து குறைந்த காலக் கட்டத்தில் உற்பத்தி செய்து வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இராணுவப் பணியிலிருந்து திரும்பும் மருத்துவர்கள்.

* 330. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணுவத்தில் பணியாற்றிவிட்டுத் திரும்பிவரும் டாக்டர்களுக்கு அரசு தனிச்சலுகை காட்டி வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை † ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இராணுவத்தில் பணியாற்றியவர்கள் உள்ளபடியே நாட்டுக்காகப் பணியாற்றியவர்கள் ஆகிறார்கள். ஆகவே, எம். டி. போன்ற உயர்படிப்புக்குச் சேர்க்கும்போது இப்படி இராணுவத்தில் வேலை பார்த்துவிட்டுத் திரும்பிய டாக்டர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மேல் படிப்புக்கு விண்ணப்பிக்கும்போது பொதுவாக அவர்களுடைய நீண்டகால சர்வீஸ் கருத்தில் கொள்ளப்படுகிறது. இராணுவத்தில் போய் பணியாற்றிவிட்டு அரசாங்கப் பணியில் இருந்தால் அவர்களுக்கு ஐந்தாண்டு, எட்டாண்டு பணிப் பயிற்சி ஏற்பட்டு விடுகிறது. அவர்களுக்குச் சில முன்னுரிமைகள் வரும். அவர்கள் இராணுவத்தில் பணியாற்றியதும் இதுகுறித்து கருத்தில் கொள்ளப்படும். ஆனால், எண்ணிக்கை அடிப்படையில் இடங்கள் ஒதுக்குவதில்லை. அவர்களுக்கு முன்னுரிமை இருக்கிறது. மேல் படிப்பில் இவைகளைக் கவனிப்பது அவ்வளவாக இயலாது. ஆனாலும், அவர்கள் சலுகை அளிக்கப்படுகிறார்கள் என்பது பொதுவான நிலைமை.

திருக்குவளையில் உள்ள மருந்தகம்.

* 331 வினா.—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்குவளையில் உள்ள அரசினர் மருந்தகத்தை படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருக்குவளையில் உள்ள அரசினர் மருந்தகத்திற்குத் தனியார் யாரேனும் உதவி அளித்திருக்கிறார்களா? திருக்குவளை முக்கியமான ஊர் என்ற காரணத்தால் திருக்குவளை அரசினர் மருந்தகத்தை இனிமேலாவது விரிவுபடுத்துவது குறித்து அரசு ஆலோசிக்குமா ?

---

† 690–695-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.